DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 96/2024**

Deposition of Witness: PW1.

| | | | |
|---|---|---|---|
| Name | லட்சுமி | Husband Name –சந்திரசேகரன் | |
| Age | 75 | Village – | போடிநாயக்கனூர் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.11.2025.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் ஏழாம் வகுப்பு வரை படித்துள்ளேன் எனக்கு எழுத படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் எத்தனை லக்க சொத்துக்களுக்கு வழக்கு போட்டுள்ளேன் என்றால் 2 லக்க சொத்துக்களுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்குரை சொத்தில் 1ம் லக்க சொத்து எனக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். வழக்குரை 1ம் லக்க சொத்தில் படியை பற்றியோ மாடியை பற்றியோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணமான கிரைய பத்திரத்தில் மேற்படி மாடிப்படியை குறித்தோ முதல் தளத்தை குறித்தோ குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்குரை 1ம் லக்க சொத்தான கடையை ஜோதிமணி என்பவருக்கு 2002ம் ஆண்டு வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் சரிதான். அதைத்தொடர்ந்து 1ம் லக்க சொத்தை ஜெயக்குமார் என்பவருக்கு வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் சரிதான். 2002ம் ஆண்டு முதல் 1ம்லக்க சொத்தை வாடகைக்கு விட்டு அதில் வாடகைக்கு இருப்பவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை 1ம் லக்க சொத்துக்கு அருகில் அய்யப்பன் என்பவர் கடையை வைத்து ஸ்டேஷனரி தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதியின் தந்தை ஜெயராஜ் காலத்திலிருந்தே அந்த சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சுமார் 25 வருடங்களாக அனுபவித்து வருகிறார்கள். 1ம் லக்க சொத்தில் மாடிப்படிகள் இருப்பதாக காண்பிப்பதற்கு புகைப்படங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

நீதிமன்ற ஆணையர் மூலம் வழக்கு சொத்தை பார்வையிட்டால் தான் சொத்து எந்த அமைப்பில் இருக்கிறது என தெரியவரும் என்றால் சரிதான். இதுவரைக்கும் 1ம் லக்க சொத்தை பார்வையிட வேண்டும் என நீதிமன்ற ஆணையரை நியமிக்ககோரி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். 1ம் லக்க சொத்தில் உள்ள முதல் தளத்தில் தற்சமயம் கடைகள் எதுவும் இல்லை என்றால் சரிதான், ஆனால் முதலில் இருந்தது அது இடிந்துவிட்டது. 1ம் லக்க சொத்தில் உள்ள மாடிப்படிகளை நாங்கள் உபயோகிப்பதை இடைஞ்சல் செய்யக்கூடாது என பிரதிவாதியிடம் சொன்னேனா என்றால் சொன்னேன், அதற்கு அவர் மாடிப்படிகளை உபயோகம் செய்தால் வெட்டிவிடுவேன் என மிரட்டினார். பிரதிவாதியிடம் எப்போது அழைத்து கேட்டேன் என்றால் சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக கேட்டேன், ஆனால் எப்போது கேட்டேன் என சரியாக நியாபகம் இல்லை. 2002ம் ஆண்டே நான் வழக்குரை சொத்தை வாடகைக்கு விட்டுவிட்டு சென்றுவிட்டேன் என்றும், பிரதிவாதியிடம் சென்று நான் இடைஞ்சல் செய்யக்கூடாது என கேட்கவில்லை என்றும், அவர் என்னை மிரட்டவும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 2002ம் ஆண்டிலிருந்தே நான் அனுபவத்தில் இல்லை என்பதால் நான் காலம் கடந்து கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல, செந்தில் என்பவர் மாடியில் தையல் கடை வைத்திருந்தார் சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பாக மாடியிலிருந்த கடை இடிந்து விட்டதால் கீழே உள்ள 2ம் லக்க சொத்திற்கு வந்தார், சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக வெளியேறிவிட்டார். மேற்படி செந்தில் மாடியில் குடியிருந்த விபரத்தையோ 2ம் லக்க சொத்தில் குடியிருந்த விபரத்தையோ எனது வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் லக்க சொத்தின் மாடியில் எந்த கடையும் இல்லை என்றும், அதில் செந்தில் ஒருகாலத்திலும் கடை நடத்தவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. வழக்குரை சொத்து சம்மந்தமாக பிரதிவாதியிடம் 27.06.2024ம் தேதி நான் வழக்குரையில் சொல்லியுள்ளவாறு கேட்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் பிரதிவாதி அய்யப்பன் போடி நகராட்சியில் கட்டிடசீரமைப்பு சார்ந்த அனுமதி எதுவும் பெறாமல் கட்டிடம் கட்டியுள்ளார் என சொல்லியுள்ளதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி கட்டிடசீரமைப்பு

அனுமதி பெற்றாரா இல்லையா என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி கட்டிட சீரமைப்பு அனுமதி பெற்றாரா இல்லையா என்பது குறித்து போடிநாயக்கனூர் நகராட்சி அலுவலரை விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் சரிதான். போடிநகராட்சியில் அனுமதிபெறாமல் கட்டியுள்ளரா இல்லையா என்பது போடிநகராட்சிக்கும் பிரதிவாதிக்கும் உள்ள பிரச்சனை என்றால் சரிதான். இந்த வழக்குரையில் போடிநகராட்சியை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். போடிநகராட்சிக்கு எதிராக எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். நான் 2ம் லக்க சொத்தில் எனக்கும் உரிமை இருப்பதாக விளம்புகை பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். அதேபோல் 2002ம் ஆண்டிலிருந்து வழக்குரை சொத்திலிருந்து வெளியேறிவிட்டதால் தாவா 2ம் லக்க சொத்து குறித்து எந்த பரிகாரமும் என்னால் கோரவில்லை என்றால் சரியல்ல. எனவே வழக்குரை 2ம் லக்க சொத்தை பொறுத்து என்னால் எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2025.11.17 15:52:21 +0530

District Munsif,
Bodinayakanur.